ISSN:2582-9599

# நெடுநல்வாடை காட்டும் அழகுணர்வு

**கு.மாலா[1] & முனைவர் ம.பிரகாஷ்[2]**

**[1]முனைவர் பட்ட ஆய்வாளர் & [2]உதவிப் பேராசிரியர் & நெறியாளர்,**

**தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,**

**பல்லாவரம், சென்னை - 600 117.**

**26**

**ஆய்வுச்சுருக்கம்**

"தமிழர் கண்ட அழகியல்" என்ற தலைப்பினை நெடுநல்வாடையின் வழி அறிந்துகொள்ளலாம். அழகு என்பதற்கான வரையறை ஒவ்வொருவர் பார்வையில் வேறுபடும் என்றாலும், இதனை இருவேறு கோணங்களில் காணலாம். இலக்கியத்தினை அமைத்திருக்கும் பாங்கு, சொல்லாட்சி, காட்சிகளை அமைத்தவிதம், அவற்றை வரிசைப்படுத்தியமை இவையெல்லாம் நெடுநல்வாடையில் நக்கீரரின் புலமைத்திறனுக்குச் சிறந்த சான்று. எனவே, இந்நூலின் அமைப்பு என்பதே அழகு. இதில், சங்ககாலத்தின் பல்வேறு கலைஞர்களின் திறனுக்குக் கட்டியம் கூறும் வகையில் அமைந்திருக்கும் அரண்மனை, அந்தப்புரம், அரசமாதேவியின் பாண்டில், சேக்கை என ஒவ்வொன்றும் அழகுக்கு அழகு சேர்க்கும் விதத்தில் அமைந்துள்ளமை தமிழரின் அழகியல் உணர்வை உள்ளங்கை நெல்லிக்கனியென உணர்ந்துகொள்ள உதவுகின்றது.

**முன்னுரை**

சங்ககாலம் தொட்டு, முன்னோர்கள் காணும் ஒவ்வொரு பொருளிலும் அழகினை மேம்படுத்திப் பார்த்தனர். கலை என்பது வாழ்வில் பின்னிப்பிணைந்தது. "ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என் அன்னை" என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் சரசுவதி அந்தாதியில் பாடியிருப்பதிலிருந்து கலைகள் பலவகைப்பட்டவை என்பதை அறியலாம். அனைத்துமே இன்றியமையாததுதான் என்றாலும், சில கலைகளால், அழகுக்கு அழகு சேர, காணும் காட்சியின் தன்மை மேம்படுகிறது. அழகு என்பது தனி மனிதனானாலும் சரி, வீடு, நகரம், நாடு, விலங்குகள், பறவைகள் போன்றவைகளானாலும் சரி, அவைகளையும் அலங்கரித்து, அதனுடைய அழகுக்கு அழகு சேர்த்தனர்.

**அன்றாட வாழ்வில் அழகியல் நோக்கு**

கலைகள் இல்லாத வாழ்வு என்பது வெறுமையானதே. நம்முடைய அன்றாட வாழ்வில் செய்யும் சிறு செயல்களிலும் ஒரு அழகியல் நோக்கு இருப்பதை உணரலாம். எடுத்துக்காட்டாக, வாசலில் கோலமிடுவது, வீட்டின் உள்ளேயும் வெளியேயும் அழகுபடுத்துதல், திருமணங்களில் மணமக்கள் மட்டுமல்லாமல், திருமண மண்டபம், மணமேடை, மணமேடையின் பின்னணியை அலங்கரிப்பது முதல் வருபவர்களுக்கு மருதாணி வைப்பது வரை அனைத்தும் அழகு சார்ந்தவையே. திருவிழாக்காலங்களில் வாழைமரம், தோரணங்கள் கட்டுவது போன்றவையும் நடைமுறையில் உள்ள வழக்கங்கள்.

**அழகியல் என்பதன் அடிப்படை**

அழகு என்பது ஒவ்வொரு தனிமனிதனின் உள்ளம் சார்ந்த ஒன்று. இது வண்ணம், வடிவு, சுவை, அளவு, தோற்றம், செயல்பாடு எனப் பல்வேறு அமைப்புகளுக்கு உட்பட்டு, அதனால் ஏற்படும் பொலிவை அழகு என்று கொள்கிறோம். அழகு என்பதன் அடிப்படை ஒரு ஒழுங்குமுறை ஆகும். தாறுமாறான அமைப்பிலிருந்து ஒழுங்குபடுத்தி வைக்கும்பொழுது ஏற்படும் உணர்வு அழகு ஆகும். இதனை, ஆங்கிலத்தில் “ரிதம்” என்று கூறுவர். இதனை, நெடுநல்வாடையின் வழி காணலாம்.

**நூற்பெயரின் அழகு**

“நெடுநல்வாடை” என்ற நூற்பெயர், அதன் அமைப்பிலேயே பாட்டுடைத் தலைவன், தலைவி ஆகியோரின் மனநிலையை விளக்கும் வகையில் அமைந்துள்ளது. நெடிய, நல்ல வாடை என்பதே நெடுநல்வாடை. போருக்குச் சென்றிருக்கும் தலைவனைப் பிரிந்தமையால் அரசமாதேவிக்கு வாடைக்காலத்தின் ஒரு பொழுது என்பது ஊழிக்காலம் போன்ற நெடிய வாடையாகவும், அதே சமயம் பாசறையில் கடமை உணர்வுடன் இருக்கும் அரசன் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அது நல்ல வாடையாகவும் அமைந்திருப்பதை ஒரு சேர விளக்கும் வகையில் நூற்பெயர் அமைந்துள்ளமையே ஒரு அழகுதான்.

**கூதிர்காலத்தின் அடுக்கிய காட்சியமைப்பு**

கூதிர்காலத்தின் குளிரின் கொடுமையை நக்கீரர் அடுக்கிக் கூறியுள்ள வகை மனம் கவரும் வகையில் அமைந்துள்ளது.

> **“வையகம் பனிப்ப, வலனேர்பு வளைஇப்**
> **பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென**
> **குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்”** **(நெடுநல்வாடை 1-12)**

உலகமே குளிரால் நடுங்குகிறது என்று தொடங்கிய நூலாசிரியர் நக்கீரர், அவ்வுலகில் வாழும் கோவலர்கள் குளிர் தாங்காமல் படும் துன்பத்தையும், புலம் பெயர்ந்த அவர்களின் வருத்தத்தையும் விளக்குகிறார். மேய்வது மாக்களின் இயற்கை; ஆனால், அந்த இயற்கையையே அவை மறந்து போகும் அளவு குளிர் வாட்டுகிறது என்பதை “மா மேயல் மறப்ப” என்ற வரியில் சொல்லும் அவர், “மந்தி கூர” என்ற வரியில், எவ்வாறு பெரிய மந்திகள் குளிரால் குன்றிப்போய் உட்கார்ந்திருந்தன என்பதைக் காட்சிப்படுத்துகிறார்.

“கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்” (தொல்காப்பியம் உரியியல் (16)) கன்றுக்குட்டிகளுக்குப் பாலைக்கூடத் தர விருப்பமில்லாத கறவைகளையும் பறவைகள் குளிரால் வீழ்வதையும் கூறி, இறுதியில் அந்தக் குன்றே குளிரால் நடுங்கியது என்று படிப்படியாக அவற்றைக் காட்சிப்படுத்தி அமைத்த விதத்தில், குளிரின் பாதிப்பு படிப்பவர்களுக்கே ஏற்படும்.

பத்துப்பாட்டில் இடம்பெறும் நக்கீரரின் மற்றொரு நூலான திருமுகாற்றுப்படையில்,

> **“உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு**
> **பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாங்கு”**

என்பது ஆதவன் கடலில் எழும் காட்சியைக்கூறும் அழகிய காட்சிவிளக்கம் ஆகும்.

கொடுங்கோல் கோவலர் என்பது இரு பொருள்படும். ஆநிரைகளுக்கான தழைகளை உணவாகப் பெற வளைத்து இழுத்துத் தரக்கூடிய கோல் என்றும், அவைகளுக்குத் துன்பத்தைத் தரக்கூடிய கோல் என்றும் கொள்ளக்கூடியது.

**“கொடுங்கோல் கோவலர் பின்நின்று உய்த்தர”** **(முல்லைப்பாட்டு (15))**

**“கொடுங்கோல் கல்லாக்கோவலர்”** **( அகநானூறு (74))**

என்பதிலும் இந்த சொல் பயன்பட்டுள்ளதைக் காணலாம்.

**“கோவலர் நடுங்க, மறப்பக் கூர வீழ**
**ஒழிய, மலரக், கவரக், கற்ப, வணங்க, முற்றத், தூங்கத்**
**திரிதர, அயர, இருப்ப, மறுகத், துறப்பப், புகைப்பத், தூங்கத்**
**துறப்ப ஆர நிறுப்பப் புலம்பப் பெயல் செறிந்து**
**கூதிர்க்காலமாய் நிலை பெற்றது அவ்விடத்து என முடிக்க”**

**(நச்சினார்க்கினியர் உரை)**

இவ்வாறாக, அழகுற விளக்கப்பட்டுள்ளது. இது போலவே ஊரின் செழிப்பு உவக்கும் வகையில் விளக்கப்பட்டுள்ளது. இட எல்லை கருதி அதனை விளக்கமாக இக்கட்டுரையில் குறிப்பிடவில்லை. இவை இலக்கிய இன்பம் தரும் அழகு. இனி, இதில் குறிப்பிட்டுள்ள அழகுக்கலைகளைக் காண்போம்.

**நெடுநல்வாடையின் கலைச்சிறப்பு**

நக்கீரர் நெடுநல்வாடை மூலம் கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, ஒப்பனை முதலான கலைகளைத் திறம்படக் கூறியுள்ளார்.

**கட்டடக்கலையும் சிற்பக்கலையும்**

கூதிர் நிலைபெற்றது… அடுத்தது என்ன…? சற்றே காத்திருங்கள்…. என்று கூறுவது போல நாடகத்தில் வரும் அடுத்த காட்சியை ஒப்ப, அரசியின் அரண்மனைக் காட்சிவிளக்கம் தருகிறார் நக்கீரர். எவ்வாறு நாள் தேர்ந்தெடுக்கப்படுகிறது என்பதில் தொடங்கி, ஒவ்வொன்றும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

**“ஒருங்குடன் வளைஇ ஓங்குநிலை வரைப்பிற்**
**வென்றெழு கொடியோடு வேழஞ் சென்றுபுகக்**
**குன்றுகுயின் றன்ன ஓங்குநிலை வாயில்”** **(நெடுநல்வாடை 79 – 88)**

சிற்பக்கலையில் வல்லவர்கள் தேர்ந்த நாளினைக் குறித்து உருவாக்கிய அரண்மனையின் மதிலானது, அனைத்து கட்டடங்களையும் தன்னுள்ளே கொண்டு மிக உயர்ந்த கோபுர வாயிலைக்கொண்டிருந்தது. அதனுடைய உயர்ந்த கதவுகளையும், அதன் பிடிகளையும் அதிலமைந்த நுட்பமான வேலைப்பாட்டையும் குறித்து தன் உரையில், “பாண்டியனது அரண்மனை வாயிலின் மேல் நிலையில் கசலட்சுமியின் உருவம் அமைக்கப்பட்டிருந்தது (நெடுநல்வாடை, அடி, 81-86). வாயில் நிலை பெரும்பாலும் உறுதி வாய்ந்த மரத்தாற்செய்யப்பட்டிருத்தல் வேண்டும். மேல் நிலையின் நடுப்பகுதியில் இலக்குமியின் உருவம் அமைக்கப்பட்டது. அதன் இரு புறங்களிலும் பெண் யானைகள்

துதிக்கைகளை இலக்குமியின் தலைக்கு மேல் உயர்த்திச் செங்கழுநீர் மலர்களை இலக்குமியின் மீது சொரிதல் போலச் செதுக்கப்பட்டிருந்தன. இங்ஙனம் திருமகள் இரண்டு யானைகளின்' இடையில் வீற்றிருத்தல், இன்றுள்ள கோவில்களிலும் காணலாம். பல பழைய கோவில்களில் இக்காட்சி சுதையால் அமைக்கப்பட்டுள்ளது." (பத்துப்பாட்டு ஆராய்ச்சி , பக்கம் : 604) மா. இராசமாணிக்கனார் இது குறித்து விளக்கியுள்ளார்.

கைத்தொழில் வல்ல தச்சனால், இடைவெளியில்லாமல் பல மரங்களைச் சேர்த்து முடுக்கி உருவாக்கப்பட்ட மதிலின் வாயில், பின்பு நெய் பூசப்பட்டு வெண்சிறு கடுகினால் தூவப்பட்ட அழகுடையதாகும். வெற்றியுடன் திரும்பும் போர் யானைகள் நுழையும் வண்ணம் உயரமாகவும் அகலமாகவும், இந்த கோபுர வாயில் அமைந்திருக்கும் . இது மலையின் நடுவில் ஒரு வெளியிடம் உண்டாவது போல அமைந்திருக்கும் என்று ஓங்கிய அரண்மனை மதிலையும் கோபுர வாயிலின் சிறப்பையும் குறிப்பிட்டுள்ளார். இது அந்நாளைய வேலைப்பட்டின் சிறப்பினைக் கூறுகிறது.

**ஒப்பனைக்கலை**

ஒப்பனை என்பது தனிமனிதனுக்கானது மட்டுமல்ல விலங்குகளுக்கும், வாழிடங்களுக்கும், பயன்படுத்தும் பொருள்களுக்குமானது. தற்போது கூட பொங்கல் திருவிழா காலத்தில் மாடுகளை பல விதங்களில் அழகுபடுத்தி மகிழ்வதைக் காண்கிறோம். அது போல, போர்க்களத்தில் யானைகள் முகப்படாமுடன் இருந்தது புலனாகிறது. தனிமனித ஒப்பனையும் தனக்குத்தானே செய்துகொள்வது, பிறரால் செய்யப்படுவது என்று இரு வகைகளில் அடங்கும். நெடுநல்வாடையில் அகில்புகையினைக் கூந்தலுக்குக் காட்டுவது, சந்தனம் அரைப்பது ஆகியவை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அரசியின் வட்டக்கட்டில்**

அரண்மனை அமைப்பு, அந்தப்புர அமைப்பு, முற்றம் இவைகளைப் பற்றிக் கூறிய நக்கீரர், அரசமாதேவியின் வட்டக்கட்டில் பற்றி விவரிக்கும் அழகு, அத்தகைய திறன் மிக்க வேலைப்படுகள் பற்றிய வியப்பினை ஏற்படுத்துகின்றது.

**"தசநான் கெய்திய பணைமருள் நோன்றாள்**
**பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்" (நெடுநல்வாடை 115-123)**

யானையின் தந்தத்தால் செய்யப்பட்ட கட்டில் என்பது இயல்பாகக் கூறும் கூற்று. ஆனால், யானையின் தந்தத்திற்கான விளக்கம் பெரும் வியப்பைத் தருகிறது. நாற்பது ஆண்டுகள் நிரம்பிய, முரசுகள் போன்ற பெரிய காதுகளைக் கொண்டதும், திரண்ட வலிமையான கால்களைக் கொண்டதும், அழகிய புள்ளிகளையும் கொண்ட நெற்றியை உடையதும், போரில் தன்னுடைய சிறந்த ஆற்றலைக் காட்டக்கூடியதுமான யானைய்ன் தானே வீழ்ந்துபட்ட பெரிய தந்தங்களை எடுத்து தச்சன் செம்மையாகத் தன்னுடைய சிற்றுளியால் செதுக்கிச் செய்த அழகிய வட்டக்கட்டில் என்று விவரிக்கும்போது, அந்தக் காட்சி நம் கண்முன் படர்கிறது. அதுமட்டுமல்லாமல், நிறைமாதமான கருவுற்றிருக்கும் மகளிரின் பால் முற்றித் திரண்ட முலையைப் போன்ற குடத்தின் அமைப்பு கட்டில் காலின் மேல் பகுதியிலும் உள்ளிப்பூண்டைப் போன்ற வடிவில் குமிழ் உடையதாகக் கட்டில் காலின் கீழ் பகுதி அமையும்படியும் இடையே இலை வடிவங்கள் பொறித்தும் அந்தக் கட்டிலின் கால்கள்

அமைக்கப்பட்டிருந்தன.

**என்னே வேலைப்பாடு !!!**

**“மடைமாண் நுண்ணிழை பொலியத் தொடைமாண்டு**
**தோடமை தூமடி விரித்த சேக்கை” ( நெடுநல்வாடை 124-135)**

கட்டிலைச் செய்த விதம் பற்றிக்கூறிய புலவர், கட்டிலின் ஒப்பனை மற்றும் அதிலமைந்த படுக்கை பற்றி விவரிக்கிறார். முத்துச்சரங்கள் நாற்புறமும் தொங்கவிடப்பட்டன. பல நிறங்கள் கொண்ட மயிர்க்கற்றைகளை படுக்கையின் நடுவிடத்தில் பரப்பிவைத்தனர். அவற்றின் மேல் சிங்கம் முதலிய விலங்குகளை வேட்டையாடுவது போன்ற காட்சிகள் பொறிக்கப்பட்ட தகடுகள் சாளரங்களாக பதிக்கப்பட்டு, ஆணிகளால் தைக்கப்பட்டன. அப்படுக்கையின் மேல், காட்டுப்பகுதியில் பூத்த முல்லை மற்றும் ஏனைய பூக்களும், நிரப்பப்பட்டன. கட்டிலின் மேல் இரண்டாய் அமைந்த படுக்கைகள் இணைத்து இடப்பட்டு, அவற்றின் மேல் தன் துணையைப் புணர்ந்த அன்னச் சேவலின் நுண்ணிய முடிகள் பரப்பப்பட்டன. அதன் மேல் கஞ்சியில் தோய்க்கப்பட்ட மெல்லிய மடிப்புடைய ஆடை விரிக்கப்பட்டது. இவ்வாறாக, அரசமாதேவியின் வட்டக்கட்டிலும், அதிலமைந்த படுக்கையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**ஓவியச்சிறப்பு**

அரசமாதேவியின் அழகிய வட்டக்கட்டிலின் மேற்கூரை ஓவியம் குறித்து தம்முடைய ஆராய்ச்சி உரையில் மா. இராசமாணிக்கனார் பின்வருமாறு கூறியுள்ளார். “பாண்டிமாதேவியின் வேலைப்பாடு நிறைந்த தந்தக் கட்டிலின் மேற்கூரையில் ஓவியங்கள் எழுதப்பட்டிருந்தன; மேடராசி முதலிய இராசிகள் வரையப்பட்டிருந்தன: திங்களும் உரோகிணியும் எழுதப்பட்டிருந்தன. திங்களோடு சேர்ந்து உரோகிணி இருப்பது போலப் படம் 'வரையப்பட்டிருந்தது. உரோகிணி தன் கணவனாகிய திங்களை விட்டுப் பிரியாதிருப்பது போலத் தானும் தன் கணவனை விட்டுப் பிரியாதிருக்க இயலவில்லையே என்று எண்ணிப் பாண்டிமாதேவி பெருமூச்சு விட்டாள் என்று நெடுநல்வாடை இயம்புகிறது (அடி, 159-163). அரண்மனையுள் எழுதப்பட்ட இந்த ஓவியங்கள் மிகச்சிறந்த ஓவியரால் எழுதப்பட்டனவாதல் வேண்டும் என்பதில் ஐயமில்லை அன்றோ?” (பத்துப்பாட்டு ஆராய்ச்சி, பக்கம் : 599)

இப்படிப்பட்ட கட்டிலில், முன்பு, பல்வேறு அணிகலன்களுடன் பொலிவோடு இருந்த அரசி தற்பொழுது தன் கணவனைப் பிரிந்து காத்திருக்கும் தருணத்தில் அணிகலன்கள் ஏதுமின்றி, தாலி ஒன்று மட்டுமே கொண்டு வாட்டம் கொண்டவளாகக் காட்சி தருவதை நக்கீரர், “புனையா ஓவியம் கடுப்ப” என்று கூறுகிறார். வண்ணங்களாலொப்பனை செய்யாமல் வடிவத்தை மட்டுமே கோட்டிட்டுக்காட்டியது போல புனையாத ஓவியமாய் அவள் வீற்றிருந்தாள் என்று அவளை வர்ணிக்கிறார்.

**முடிவுரை**

கலைகள் வாழ்வை முழுமைப்படுத்துகின்றன. ஏதாவதொரு கலையினில் ஆர்வம் கொண்டு கற்கும்பொழுது மனதுக்கு மகிழ்ச்சியும், நிறைவும் கிடைக்கிறது. சங்க இலக்கியங்களில் காணப்படும்

கலையுணர்வு இன்றைய காலகட்டத்தில் மலைப்பைத் தருகிறது. தொழில்நுட்பத் துணையுடன் சாதிக்கும் எத்தனையோ திறன்களை அக்காலத்தில் மிக நுட்பமாகவும், நயமாகவும் செய்திருக்கும் பாங்கு அரசியின் கட்டில், அதன் மேற்கூரை ஓவியங்கள், பாசறைக் காட்சிகள், அரண்மனை மற்றும் அந்தப்புர அமைப்பு போன்ற ஒவ்வொன்றிலும் அறிந்துகொள்ளமுடிகிறது. இதன் மூலம் தமிழரின் அழகியல் உணர்வு வெளிப்படுகிறது.

**திறவுச்சொல்** : பத்துப்பாட்டு, நெடுநல்வாடை, வாடைக்காற்று, கூதிர்காலம், அந்தப்புரம், அரண்மனை, அழகியல்

**துணைநூற்பட்டியல்**

1. அரங்கசாமி ப., புலவர் (பதி.) பத்துப்பாட்டில் பைந்தமிழ் வளம், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2004.
2. இராசமாணிக்கனார் மா., டாக்டர், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, சென்னை, 1970.
3. சண்முகசுந்தரம் (தொ.), சங்கத்தமிழ், காவ்யா, சென்னை, 2007.
4. நாராயண வேலுப்பிள்ளை M., வித்துவான் (உ.ஆ), பத்துப்பாட்டு (இரண்டாம் பகுதி), சண்முகம் பிள்ளை .மு. பேராசிரியர் (பதி), முல்லை நிலையம், சென்னை, 2009.
5. நாகராசன். V, முனைவர். (உ.ஆ), பத்துப்பாட்டு (இரண்டாம் பகுதி), பாலசுப்பிரமணியன், கு.வெ., முனைவர், (பதி.), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
6. வேங்கடசாமி மயிலை சீனி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், பாரி நிலையம், சென்னை, 1990.
7. Https://www.projectmadurai.org
8. www.Sangacholai.in
9. www.tamilvu.org